11

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1415/17 - 2005 ඔක්තෝබර් 19 වැනි බදාදා - 2005.10.19

1415/17 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.- பீ.21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

24அ (1) ஆம்பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் இக்கட்டளையின் மூலம் -

(1) கலை, மானிடவியல், சமூக அறிவியல் என்பனவற்றின் உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கத்திற்கு 2005, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து உயர்தரக் கற்கை நிலையமொன்றைத்தாபிக்கின்றேன் ; அத்துடன்

(2) அத்தகைய நிலையத்திற்கு "மானிடவியல் மற்றும் அறிவியலில் உயர்தரக் கற்கைக்கான தேசிய நிலையம்" என்னும் பெயர் மகுடத்தைக் குறித்தொதுக்கின்றேன்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.
சனாபதி.

கொழும்பு,
2005, ஒற்றோபர் 10.

ச.வ.- பீ.21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின்16ஆம் இலக்க கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு.

கொழும்பு,
2005, செத்தெம்பர் 22.